குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், பிச்சைத்தலைவன்பட்டி கிராம ஊராட்சித் தலைவர் / செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.மகேஸ்வரி இராஜாமணி

வீட்டு மனைப்பிரிவு அனுமதி எண்.01/2024 நாள்: 19/09/24

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் – குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் – பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி – பிச்சைத் தலைவன்பட்டி கிராமம், சர்வே எண்கள்.**155/2A, 2B, 3A, 3B, 8A, 8B** மற்றும் **156/1A, 1B, 1C, 1D** ஏக்கர் 6 செண்டு 16 பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கி – உத்திரவிடல்.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் கடிதம் **AY11VE48 / 2024** நாள்: 24.08.2024.

2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் **SWP / DTCP / THOOTHUKUDI / LAYOUT No.119/2024** நாள்: 24.08.2024.

உத்தரவு:

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி, பிச்சைத்தலைவன்பட்டி கிராமம், சர்வே எண்கள் **155/2A, 2B, 3A, 3B, 8A, 8B** மற்றும் **156/1A, 1B, 1C, 1D** ஏக்கர் 6 செண்டு 16 பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அங்கீகாரம் ஒப்புதல் பார்வை (1) ல் கண்ட கடிதத்தின்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கோவில்பட்டி சார்பதிவகம் ஆவண எண்.6956/2024 மற்றும் 6957/ 2024 நாள்: 19.08.2024 மூலம் பொது உபயோகத்திற்கான இடங்கள் மற்றும் சாலைகள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

...2

பார்வை (1) ல் காணும் கடிதத்தில் நகர் ஊரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறப்படும் வீட்டு மனைப்பிரிவுகளுக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் கட்டணம் மனை ஒன்றிற்கு ரூ.1,000/- வீதம் 137 மனைகளுக்கும் கட்டணம் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது. நிலப் பயன்மாற்றக் கட்டணமாக சந்தை மதிப்பீட்டில் 3% சதவீதம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மனுதாரர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வை (1) ல் காணும் கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலின்படியும் இணைத்து வரப்பெற்றுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் மனுதாரர்களால் செலுத்தப்பட்டு விட்டதாலும் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், பிச்சைத் தலைவன்பட்டி ஊராட்சி, பிச்சைத்தலைவன்பட்டி கிராமம், சர்வே எண்கள். **155/2A, 2B, 3A, 3B, 8A, 8B** மற்றும் **156/1A, 1B, 1C, 1D** ஏக்கர் 6 செண்டு 16 பரப்பளவு உள்ள மனைப்பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பொதுப்பயன்பாடு இடங்கள் நீங்கலாக மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனரால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின்படி 1 முதல் 137 வரையிலான மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் கூறப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்.

தலைவர்

பிச்சைத்தலைவன்பட்டி ஊராட்சி

தலைவர்
ஊராட்சி மன்றம்
பிச்சைதலைவன்பட்டி ஊராட்சி
குருவிகுளம் ஒன்றியம்

இணைப்பு:

வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர்
திரு. M. கணேசமூர்த்தி,
திரு. N. ஜெயக்குமார்
141B/4, ஆண்டாள்புரம்,
இராஜபாளையம்.